செய்தி வெளியீடு எண்: 790 நாள்: 30.10.2018

<u>செய்தி வெளியீடு</u>

குஜராத் மாநிலம், கெவாடியா மாவட்டத்தில் உள்ள சர்தார் சரோவர் அணையில் உலகத்தின் மிகப் பெரும் சிலையாக அமையவுள்ள **“இந்தியாவின் இரும்பு மனிதர்” சர்தார் வல்லபாய் படேல் திருவுருவச் சிலையினை** மாண்புமிகு இந்திய பிரதமர் திரு.நரேந்திரமோடி அவர்கள் நாளை (31.10.2018) திறந்து வைத்து நாட்டிற்கு அர்ப்பணிக்க உள்ளார்கள். இந்த வரலாற்று சிறப்புமிக்க விழாவிற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு செய்தி (ம) விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்களும், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு (ம) தொல்லியல் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்களும் இவ்விழாவில் கலந்து கொள்ள இன்று (30.10.2018) மாலை 04.30 மணியளவில் சென்னையிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டு சென்றனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9